DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.118/2014

PROSECUTION WITNESS No - PW- 6

| | | | |
|---|---|---|---|
| Name : | மகாலிங்கம் | Caste: | |
| Father Name | ஆறுமுகம் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of March 2026.

4 வது, 6 வது மற்றும் 9 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2 வது எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொளி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.

<u>முதல் விசாரணை :</u>

எனக்கு சொந்த ஊர் ஒய்யவந்தான் பேச்சாத்தாக்குடி கிராமம் ஆகும். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன ஜெகசுப்பிரமணி (எ) பழனி என்பவரை எனக்கு தெரியும். இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள இறந்து போன பன்னீர்செல்வம் என்பவரையும் எனக்கு தெரியும். கடந்த 2000 ம் ஆண்டில் நான் இறந்து போன பன்னீர்செல்வம் என்பவரிடம் செங்கல் அறுக்கும் வேலை பார்த்து வந்தேன். அந்த காலக்கட்டத்தில் ஒய்யவந்தான் பேச்சாத்தாக்குடி கிராம சமுதாய கிணற்றில் பன்னீர்செல்வம் தண்ணீர் எடுத்து கல் தயாரிக்கும் தொழிலுக்கு பயன்படுத்தினார். அதனால் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்பது எனக்கு நேரடியாக தெரியாது. இந்த விவரங்களை எங்கள் ஊரில் பழனி என்பவர் இறந்ததற்கு பின்னால் போலிசார் என்னை கேட்டார்கள். இந்த விவரங்களை மட்டுமே நான் போலிசார் விசாரணையில் சொன்னேன். மற்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது நான் போலிசார் விசாணையில் சொல்லவுமில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்த போது நான் இவ்வழக்கில் எதிரியாக கூறப்பட்டுள்ள இறந்த பன்னீர் செல்வம் என்பவரிடம் கல் அறுக்கும் தொழில் செய்தேன் என்றும் அதற்கு சமுதாய கேணியில் தண்ணீர் எடுத்ததால் இவ்வழக்கில் இறந்து போன ஜெகசுப்பிரமணி (எ) பழனி தட்டிக்கேட்டதாகவும் அதனால் அவர்களுக்குள் பகை ஏற்பட்டது என்று நான் போலிசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. கடந்த 13.06.2000 ம் தேதி மேற்படி சம்பவம் தொடர்பாக பஞ்சாயத்தில் வாக்குவாதம் ஏற்பட்டு அதனால் இறந்த ஜெகசுப்பிரமணி (எ) பழனி என்பவருக்கும் இறந்த எதிரி பன்னீர்செல்வத்திற்கும் பகைமை ஏற்பட்டு அதன் தொடர்பாக வழக்கு சம்பவ நாளில் மதியம் 01.30 மணிக்கு பன்னீர்செல்வம் மற்றும் அவர் மகன் காளீஸ்வரன் அவர் தம்பிகள் மற்றும் சிலர் சேர்ந்து இறந்து போன ஜெகசுப்பிரமணி (எ) பழனியை கொலை செய்துவிட்டார்கள் என்றும் குருபாதம் என்பவரின் மகன் சுதாகரை காயப்படுத்தினார்கள் என்றும் போலிசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எதிரிகள் உள்ளூர்காரர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

ஏற்கனவே நடந்த மூல வழக்கு 05/2005 ல் நான் 10 வது சாட்சியாக அரசு தரப்பில் நான் விசாரிக்கப்பட்டேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. சுதாகர் என்பவருக்கு காயம் ஏற்பட்டதும் ஜெகசுப்பிரமணி (எ) பழனியை யார் கொலை செய்தார்கள் என்பதும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கேள்விப்பட்டேன். பன்னீர்செல்வம் என்பவரிடம் செங்கல்காளவாசல் நான் வேலைபார்க்கவில்லை என்றும் பன்னீர் செல்வம் என்பவர் செங்கல்காளவாசல்

வைத்திருக்கவில்லை என்றும் சமுதாய கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்தற்கு ஆதரவாக எதிரி பன்னீர்செல்வம் என்பவரிடம் வேலைபார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை.</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 16:31:29 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை